கடலூர் கிழக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், காட்டுமன்னார்கோயில் எம்.ஆர்.கே. கலையரங்கத்தில், 21-08-2025, வியாழக்கிழமை அன்று, மாலை 5 மணியளவில் நடைபெற்றது. வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

கடலூர் கிழக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில்!

கடலூர், ஆக.23-

கடலூர் கிழக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், காட்டுமன்னார் கோயில் எம்.ஆர்.கே. கலையரங்கத்தில், 21-08-2025, வியாழக் கிழமை, மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார்.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன் வரவேற்புரையாற்றனார்.

கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கழக அரசின் நான்காண்டு நல்லாட்சி தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள் நடத்திட வேண்டும், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியை மேற்கொள்ள வேண்டும், ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கும் பணியை தீவிரப்படுத்த வேண்டும் உள்பட்ட பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள்: அ.முத்துசாமி, வி.சிவக்குமார், தங்க.ஆனந்தன், த.ஜெயபாண்டியன், ஆர்.நாராயணசாமி, தெ.காசிராஜன், பி.சுப்பிரமணியன், கே.ஆர்.தனஞ்செயன், ஆர்.விஜயசுந்தரம், ஏ.எஸ்.மதியழகன், ஏ.எம்.மதியழகன், வெற்றிவேலு , வி.ஜி.பி.சபாநாயகம், வி.பி.பாலு, ஆர்.கலையரசன், த.சங்கர், ஆர்.ராஜேந்திரகுமார், கே.நடராஜன், ம.சோழன், வி.கோவிந்தசாமி, கே.ஆர்.கோவிந்தராஜ், கே.மகேஷ், எம்.வெற்றிவேல்,

கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜயராகவன், இரா.தமிழரசன், பேரூர் செயலாளர்கள்: எஸ்.கணேசமூர்த்தி, கு.வே.ப.ஜெய்சங்கர், பூ.செல்வகுமார், க.பழனி,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கே.மணிகண்டன், ஜி.முத்துக்குமார், டி.குட்டிமணி ஜெகன், டி.பிரபு, தமிழ்செல்வன், மாநகர அமைப்பாளர் எ.ஜெயமணி, மாநகர துணை அமைப்பாளர்கள் எஸ்.ராம்குமார், எஎ.ஜெயச்சந்திரன், கே.குப்புராஜ், கே.ஜி.எஸ்டி.சரத், உமாபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவருக்கு - கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அயலக அணி நன்றி அறிவிப்பு !

மாவட்ட அமைப்பாளர் பாலூர் தேவா அறிக்கை!

கன்னியாகுமரி, ஆக. 23-

கன்னியாகுமரி மேற்கு அயலக அணி அமைப்பாளர் பாலூர் தேவா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வெளிநாடு வாழ் தமிழர்களுக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் அயலக அணியை அமைத்து அத்தோடு தமிழ்நாடு அரசு சார்பில் அயலகத் தமிழர் நல வாரியம் அமைத்து அயலகத்தில் வாழும் தமிழர்களையும் கருணையோடு பாதுகாத்து வரும் எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், தமிழ் நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அயலக அணியை மேலும் வலுப்படுத்தும் விதமாக இன்று மாவட்டத்தில் அமைந்துள்ள ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பெயர்களை அறிவிக்கச் செய்து எங்கள் நெஞ்சங்களில் மகிழ்ச்சி வெள்ளத்தைப் பெருகச் செய்து கழகப் பணியை மேலும் வலிமையோடு செய்வதற்கு உத்வேகம் தந்ததற்காகக் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி. தலைவரின் வழியில் உறுதுணையாக நிற்க எங்களை உற்சாகப்படுத்தும் தமிழ்நாட்டின் துணை முதல்வரும் கழகத்தின் இளைஞரணிச் செயலாளருமான சின்னவர் உதயநிதியார் அவர்களுக்கும் நன்றி. மாவட்டத்தின் அனைத்து பகுதி அமைப்பாளர்களைப் பரிந்துரைத்து வழிகாட்டும் தமிழ்நாடு பால்வளத்துறை அமைச்சரும் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட செயலாளருமான மாண்புமிகு மனோ தங்கராஜ் அவர்களுக்கும் நன்றி. அயலக அணி அமைந்த நாளிலிருந்து எங்களை அன்போடும் உற்சாகத்தோடும் வழி நடத்தி வருகிறவரும் பகுதி தோறும் அணி அமைப்பாளர்களை அறிவித்து வழிகாட்டும் மாநில வெளிநாடு வாழ் நல அணி செயலாளர் மரியாதைக்குரிய எம்.எம்.அப்துல்லா அவர்களுக்கும், அணி தலைவர் கலாநிதி வீராசாமி M. P. அவர்களுக்கும், மாநிலத் துணை அமைப்பாளர்கள் புகழ்காந்தி, குமரி பாபு மற்றும் அனைத்து மாநில துணை அமைப்பாளர்களுக்கும்,

ஒன்றியச் செயலாளர்கள், டி.பி.ராஜன், பி.கோபால், அருளானந்த ஜார்ஜ், ஜான்சன் மாஸ்டர் பி.மோகன், டி.எஸ். ராஜேஷ் குமார், ராபி, ஆர்.எல்.சைனி கார்ட்டன், ஜி.ஜான் பிரைட், நகரச் செயலாளர்கள் எச்.வினுகுமார், ரமேஸ் சுபிஹான், ரமேஷ், பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அயலக அணி தலைவர் ஹாருண் றஸிது (நசீர்), துணைத்தலைவர் சுனிதா சத்யராஜ், துணை அமைப்பாளர்கள், ஆர்.ரவி, கவாஸ்கர், ஜாண்கிளின், கிஷோர் குமார், கீல்டா மோகன்தாஸ் மற்றும் கழகக் கிளை செயலாளர் அனைவருக்கும் நன்றி.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கீரப்பாளையம் முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளர்

பா.பூபாலன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

கடலூர்,ஆக.23-

கடலூர் கிழக்கு மாவட்டம், திருமுட்டம் கிழக்கு ஒன்றியம், புடையூர், மேலத் தெருவில் வசிக்கும் கடலூர் கிழக்கு மாவட்ட முன்னாள் கீரப்பாளையம் ஒன்றியக் கழகச் செயலாளர், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர், முன்னாள் மாவட்ட குழு உறுப்பினருமான பா.பூபாலன் அவர்கள் நேற்று முன்தினம் (21.08.2025) காலை 7.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (22.08.2025) மாலை 3.00 மணியளவில் புடையூரில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

மறைந்த பா.பூபாலனுக்கு மனைவி: திருமதி.பூ.ஜெயா, மகன்கள்: மணிவண்ண பாண்டியன் சுந்தர பாண்டியன் முருக பாண்டியன் மகள்கள்: திருமதி. பூங்குழலி திருமதி. பூங்கொடி ஆகியோர் உள்ளனர்.

மறைவுச் செய்தியறிந்ததும் மாவட்டக் கழக நிர்வாகிகளும், கழகத் தோழர்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

புதுச்சேரியில் கலைஞர் அறிவாலயம் கட்டுமானப் பணியை தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா தி.மு.கழகத்தினர் முன்னிலையில் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

புதுச்சேரியில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா தலைமையில் -

கலைஞர் அறிவாலயம் கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா !

திரளான தி.மு.க.வினர் உற்சாகமாக பங்கேற்பு!

புதுச்சேரி, ஆக. 23-

புதுச்சேரியில் கலைஞர் அறிவாலயம் கட்டுமான பணியை தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா விழாவிற்கு தலைமை தாங்கி, அறிவாலயம் கட்டுமான பணியை தொடங்கி வைத்தார்.

அடிக்கல் நாட்டப்பட்ட கலைஞர் அறிவாலயம் 3 ஆயிரம் சதுர அடியில் வாகன நிறுத்து மிடத்துடன் கூடிய தரைத்தளம், முதல் மாடியில் கலைஞர் அரங்கம், இரண்டாவது மாடியில் கூட்ட அரங்கம், அலுவலகம், கலை ஞர் நூலகம், கழகத் தலைவர், நிர்வாகிகள் அறை மற்றும் லிப்ட் வசதிகளுடன் ரூ. 4 கோடி மதிப்பில் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விழாவில், துணை அமைப்பாளர்கள் ஏ.கே.குமார், அ. தைரியநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ.மூர்த்தி, நந்தா. சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப.காந்தி, டி.அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி.கோபால், வே. கார்த்திகேயன், வெ. ராமசாமி, ப.செல்வநாதன், பா. செ. சக்திவேல், ந. தங்கவேலு, பெ.வேலவன், வீ. சண்முகம், எஸ்.தர்மராஜன், ஆர்.கோகுல், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், கே.பி.இளம்பரிதி, பெ. பழநி, மு.பிரபாகரன், எஸ். எஸ். செந்தில்குமார், வே. மாறன், நா.கோபாலகிருஷ்ணன், எஸ்.அமுதா குமார், எஸ்.நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் எம்.ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், வ. சீதாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல். மணிகண்டன், து. சக்திவேல், கோ.தியாகராஜன், ர. சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப.வடிவேல், ஜெ.மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ.சக்திவேல், க.ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழிய பாண்டியன், கலிய. கார்த்திகேயன், செ. ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி.மணிமாறன், தொ.மு.ச. அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி வெ. குலசேகரன், வர்த்தகர் அணி சு.ரமணன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, மீனவர் அணி ந. கோதண்டபாணி, ஆதி திராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், விவசாய தொழிலாளர் அணி ப. தவ முருகன், தொழிலாளர் அணி, கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை கி. சங்கர் (எ) சிவசங்கரன், பொறியாளர் அணி ஆ.அருண்குமார், நெசவாளர் அணி ந. செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந. ரவிச்சந்திரன், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ம. மதிமாறன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அ. முஹம்மது ஹாலித், மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கியராஜ், தகவல் தொழில் நுட்ப அணி தாமோ. தமிழரசன், சுற்றுச்சூழல் அணி த. முகிலன், அயலக அணி அ. ஷாஜகான், மகளிர் தொண்டர் அணி சுமதி மற்றும் அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் ஒன்றியம் கதிரம்பட்டி ஊராட்சியில் ரூ.16 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மைய கட்டடத்தை திறந்து வைத்த அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கப்பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்டும் பணியை தொடங்கி வைத்தார்.